உ

சிவமயம்.

# தத்துவ விளக்கச் சுருக்கம்.

இஃது

திருவல்லிக்கேணி

ம-ள-ள-ஸ்ரீ, T. பாலசுந்தர முதலியார் அவர்கள்

விரும்பிய வண்ணம்

பஞ்சாட்சரபுரம்

ஸ்ரீ வாலையானந்த சுவாமிகளால்

இயற்றி

சோல்டன் அண்டு கம்பனியில் அச்சிடப்பட்டது.

1918.

*All rights reserved.*

சிவமயம்.

# தத்துவ விளக்கச் சுருக்கம்.

காப்பு.

நற்குஞ்சரக் கன்று நண்ணிற் கலைஞானங்
கற்குஞ் சரக்கன்று காண்.

## பிரிவு.

1. உலகம் தோன்றி நின்று அழியும் தன்மைய தாதலினாலே அம்முத்தொழில்களைச் செய்ய ஒரு கர்த்தா வேண்டப்படும்; அவரே கடவுள். அவருக்குப் பரசிவம் என்றும் பெயர். பரம்—உயர்வு, சிவம்—சுகம், எனப் பொருள் படுவதால் பரசிவம் என்பது உயர்வான சுகம் எனப்படும். எனவே மற்றொருவரால் கொடுக்க முடியாத சுகத்தைக் கொடுப்பவர் என அறிக.

2. அவர் எங்கும் நிறைந்தவர். அவர் இயல்பாகவே பரிசுத்தர். அவர் சுதந்தரம் உடையவர். அவர் தானாகவே அறிபவர். அவர் ஏக காலத்தில் எல்லாம்

அறிபவர். அவர் எல்லாஞ் செய்ய வல்லவர். அவர் பிரதி பிரயோசனம் கருதாத பேரருளுடையவர். அவர் நித்தியர். அவர் ஆனந்த சொரூபர்.

3. இன்னும் அவரிலக்கணம் பின்வரும் செய்யுளாலும் அறியப்படும்.

கடவுளின் இலக்கணம்:—

பலகலையா கமவேதம் யாவையினுங் கருத்துப்
பதிபசுபா சந்தெரித்தல் பதிபாமே யதுதான்
நிலவுமரு வுருவின்றிக் குணங்குறிக ளின்றி
நின்மலமா யேகமாய் நித்த மாகி
அலகிலுயிர்க் குணர்வாகி யசல மாகி
அகண்டிதமா யானந்த வுருவா யன்றிச்
செலவரிதாய்ச் செல்கதியாய்ச் சிறிதாகிப் பெரிதாய்த்
திகழ்வதுதற் சிவமென்பர் தெளிந்து ளோரே.

4. எவர்கள் நிமித்தம் கடவுள் உலகத்தை முத்தொழிற் படுத்துகிறாரோ, அவர்களே ஆன்மாக்கள்.

ஆன்மாக்கள் எண்ணில்லாதவர்களாய், நித்தியர்களாய் (பிறப்பு இறப்பு இல்லாதவர்களாய்), அநாதியே மல சம்பந்த முள்ளவர்களாய், அம்மலத்தால் தடுக்கப்பட்ட இச்சாஞானக் கிரியைகளை யுடையவர்களாய், அறிவித்தால் அறியுந்தன்மை யுடையவர்களாய், ஒன்றைச் சார்ந்தே அறிபவர்களாய் உள்ளவர்கள்.

5. *ஆன்மாக்களின் இலக்கணம்:—*

எண்ணரிதாய் நித்தமா யிருண்மலத்தி னழுந்தி
  இருவினையின் றன்மைகளுக் கீடான யாக்கை
அண்ணலரு ளாலண்ணி யுவைபவரா யதனா
  லலகிலிகழ் போகங்க ளருந்து மாற்றுப்
புண்ணியபா வம்புரிந்து போக்குவர வுடைத்தாய்ப்
  புணருமிருண் மலபாகம் பொருந்தியக்கா லருளா
லுண்ணிலவு மொளியதனா லிருளகற்றிப் பாதத்
  துற்றிடுநற் பசுவர்க்க மெனவுரைப்ப ருணர்ந்தே.

6. *ஆன்மாக்களுக்கு உரிய எந்தத் துன்பத்தை நீக்கக்கருதிக் கடவுள் உலகத்தை முத்தொழிற் படுத்துகிறாரோ, அந்தத் துன்பத்திற்குக் காரணமாயுள்ளது* ஆணவமலம். *அது* செம்பிற் களிம்பு போன்று *ஆன்மாக்களை அநாதியே பந்தித்துள்ளது. அது ஒன்றாயிருந்தும் எண்ணில்லாத ஆன்மாக்களையும் மயக்குவது. அது ஆன்மாக்களுக்குத் தீய நினைவுகளைக் கொடுத்து அவர்கள் அறிவைக் கெடுப்பது. அது பக்குவமுற்ற ஆன்மாக்கள்தோறும் நீங்கும் சத்திகளை யுடையது.*

7. *ஆணவமலத்தின் இலக்கணம்:—*

ஏகமாய்த் தங்கால வெல்லைகளின் மீளு
  மெண்ணரிய சத்தியதா யிருளொளிா விருண்ட
மோகமாய்ச் செம்பிலுறு களிம்பேய்ந்து நித்த
  மூலமல மாயறிவு முழுதினையு மறைத்தும்

பாகமாம் வகைநின்று கிரோதான சத்தி
பண்ணுதலான் மலமெனவும் பகர்வாது பரிந்து
நாகமா நதிமதியம் பொதிசடையா னடிக
ணணுதம்வகை கருணைமிக நயக்தந் தானே.

8. ஆன்மாக்களுக்கு அநாதியிலே பதி சம்பந்தத்தால் புண்ணியமும், ஆணவமல சம்பந்தத்தாலும் அதனுல் தம்மிடத்துக் கலந்திருக்கும் கடவுளை அறியாமையாலும் பாபமும் உண்டு. இவையே இருவினை எனப்படும். இவைக்கு கன்மமலம் எனவும் பெயர்.

கன்மமலம் ஆணவமல சத்திபேதத்தால் பல திறப்படும். அதுதான் ஆன்மாக்களுக்குப் பல்வகையான சரீரங்களுக் கேதுவாயிருப்பது.

9. கன்மமலத்தின் இலக்கணம்:—

நண்ணியிடு முருவதனுக் கேது வாகி
நானுபோ கங்களாய் நாசோற்பத்தி
பண்ணிவரு மாதலா லநாதி யாகிப்
பலவாகி யணுக்கடோறும் படர்வ தாகி
எண்ணிவரு மனவாச கன்மத்தா லியற்று
மியல்பினதாய் மதிகதமா யிருபயனும் பாவ
புண்ணியமாய்ப் புலர்காலை மாயை மேவிப்
பொருந்து மீது கன்மமலம் புகலு மாறே.

10. ஆணவமலத்தாற் பந்திக்கப்பட்ட ஆன்மாக்கள் வசிப்பதற்கு இடமாய் உள்ளது எதுவோ அது மாயை எனப்படும்.

11. மாயை தன் காரியங்களால் ஆன்மாக்களுக்குரியதனு கரண புவன போகங்களாய் அமைந்து, அவர்களின் அறிவிச்சை செயல்களை விளக்கும். ஆனால் அதனால் ஆகும் விளக்கம் ஏகதேச விளக்கமாகையால், அது ஆன்மாக்களுக்கு மயக்க விளக்கமாகும். மயக்கமாவது பொய்யை மெய்யாய் விளக்குவது முதலியனவாகும்.

மாயாமலத்தின் இலக்கணம்:—

உருவாதி சதுர்விதமா யொன்றென் றெவ்வா
  உண்மையதாய் நித்தமா யொன்ற யென்றும்
அருவாகிக் கன்மமா ணுக்க ளியார்க்கு
  மாவார மாயசித்தா யசல மாகி
விரிவாய தன்செயலின் வியாபியா யெல்லாம்
  விரிந்தவகை புரிந்தடைவின் மேவியவை யொடுங்க
வருகால முயிர்களெல்லா மருவிடமாய் மலமாய்
  மன்னியிடு மாளநுளான் மாயை தானே.

12. மாயையானது சுத்தமாயை, சுத்தாசுத்த மாயை, அசுத்தமாயை என மூன்று பிரிவாய் இருக்கும். சுத்தாசுத்தமாயையில் அசுத்தம் கலந்திருப்பதால் அது அசுத்தமாயை என்றும் சொல்லப்படும்.

13. ஆன்மாக்களுக்குரிய வினைக்கீடாய்த் தனு வாதிகளைக் கொடுத்து, கன்மமலங்களை உருசிப்பித்து அவைகளை அருந்தும்படிச் செய்து, ஆணவமல வலியை அழித்து, அவர்களை முதல்வனிடத்தில் சேர்ப்பிக்கிறதெதுவோ அதுவே திரோதான சத்தி. இதனைத் திரோதமல மென்றும் வழங்குவர்.

14. திரோதமலத்தின் இலக்கணம்:—

திரோதமல மிறைசத்தி யான்மாவைக் கன்மஞ்
 சேருமள வாகிமலச் செறிவுநீங் களவும்
விரோதமுறை போலோக்க மறைப்பாக நின்று
 மிக்கதுதான் மிதுமாயை விரித்தறிவு பொருந்தி
வரோதயமாம் வேதங்கள் பலகலைக ளாய்ந்து
 வரினுமறி யாதவகை நிரவுமத னலிப்
பராவருளை மலமெனவும் பகர்வாது தானே
 பரமனையுங் கருணையினற் றெரிவுறப்பண்ணிடுமே

15. மாயையின் காரியங்களை மாயேயம் என்று கூறுவர்.

16. இவ்வாறு மலங்கள் ஐந்து உண்டு என்பதற்குப் பிரமாணம்.

சிவப்பிரகாசம் போது 14.

மோகமிக வுயிர்களு மொன்று முடனும் நிற்கு
மூலவா ணவமொன்று முயங்கி நின்று
பாகமிக வுதவுதிரோ தாயி யொன்று
பகர்மாயை யொன்றுபடர் கன்ம மொன்று
தேகமுறு காரணமொன் றேழுவன போகச்
செயலாரு மாமாயை திரட்சி யொன்றென்
றகமல மைந்தென்ப ரிந்து மாறு
தருளென்ப தரிதென்ப நிந்து ளோரே

எனவரும்.

17. ஆன்மாக்கள் தம்மைப் பந்தித்த பாசபேதத்தால் விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என மூவகைப் படுவார்கள். அவர்களில் விஞ்ஞானகலர் ஆணவமலம் ஒன்றே உடையவர். பிரளயாகலர் ஆணவம் கன்மம் எனும் இருமலங்களை யுடையவர். சகலர் ஆணவம், கன்மம், மாயை எனும் மூன்று மலங்களை யுடையவர். விஞ்ஞானகலர் சுத்தமாயையிலும், பிரளயாகலர் சுத்தாசுத்தமாயையிலும், சகலர் அசுத்த மாயையிலும் வசிக்கிறார்கள்.

18. விஞ்ஞானகலராவார் அணுசதாசிவர், அட்டவித்தியேசுரர், சப்தகோடிமகாமந்திரர் முதலியோர். பிரளயாகலராவார் ஸ்ரீகண்டர், வீரர் முதலியோர். சகலராவார் விஷ்ணு, பிரமர் முதலியோர்.

19. விஞ்ஞான கலர்களுக்குச் சுத்தமாயாகாரிய மாகிய வைந்தவசரீரம் உண்டு. பிரளயாகலருக்குச் சூக்குமசரீரம் உண்டு. சகலர்களுக்கு அசுத்தமாயா காரிய மாகிய சூக்கும, தூல சரீரங்கள் உண்டு.

ஒருமலவிஞ் ஞானகலர் பிரண வாதியவனு
சதாசிவர்க ளட்டவித்த
நற்ற மந்தி ரேசரிவரைச் சுத்தமாயைபா லுதவி
யதிகார மீந்தே
போருவின் மந்திரேசர்மன னந்தேசர் சுத்த
சுத்தாசத்திபா லிருமலப்
புகலு நூற்றீரோன்பதாம் பிரளயர்க்குநற்
புகழ்தூலசூக்கும தனுவும்
பெருமையொடு தந்திவரிலொருவராஞ் சீகண்டர்
பிரகிருதிபான்மு மலராம்
பிரிவிலரி யயனாதி சகலருக்த டறந்து
பின்னுயிர்களுக் கிவர்களா
லருமையைந் தொழில்செய வமைத்த
வவிகாரனே யபிடேகமாடி யருளே
யமலமுது கிரியினமர் குமாசர்க்குருபா
நலபிடேக மாடி யருளே.

20. விஞ்ஞானகலர்களுக்குக் கடவுள் அனுக்கிர கிக்கும்போது அறிவுக்கறிவாய் நின்று உணர்த்துவார்; பிரளயா கலர்களுக்கு மான், மழு, காளகண்டம், சதுர்ப் புசம், திரிநேத்திரம் கொண்டு முன் நின்று உணர்த்து

17586

வார்; சகலர்களுக்கு மானிடச்சட்டை சாத்தி முன் நின்று உணர்த்துவார்.

விஞ்ஞானகலர்க் குள்ளே விளக்கொளியாய் நின்றொளிர்வன்
மைஞ்ஞானவிலு மாணவகன் மர்க்கருளாம்-பிஞ்ஞகனே
தெய்விகமாய் வந்தளிப்பன் சேர்ந்தசக லர்க்கவர்போ
லவ்வுருவாய் வந்தளிப்ப னிங்கு

---

## பரீட்சை வினாக்கள்.

1. கடவுள் ஒருவர் உண்டு என்று ஏன் கொள்ள வேண்டும்? (1)
2. பரசிவம் என்றசொற்கு என்ன பொருள்? (1)
3. கடவுள் இலக்கணம் என்ன? (2, 3)
4. ஆன்மாக்கள் யாவர்? (4)
5. அவர்களது இலக்கணம் என்ன? (5)
6. ஆணவமலம் என்பது எது? (6)
7. அதன் இலக்கணம் என்ன? (7)
8. இருவினைகள் எப்படி ஆன்மாக்களுக்கு உண்டாயின? (8)
9. கன்மமலத்தின் இலக்கணம் கூறுக? (9)
10. மாயையாவது யாது? (10)
11. அதன் இலக்கணம் என்ன? (11)

12. மாயை எத்தனை வகைப்படும்? (12)
13. சுத்தா சுத்தமாயைக்கு வேறுபெயர் என்ன? (12)
14. அதற்குக் காரணம் கூறுக? (12)
15. திரோதான சத்தி எது? (13)
16. அது எத்தன்மையது? (14)
17. மாயேயம் என்றால் என்ன? (15)
18. மலங்கள் எத்தனை? இதற்குப் பிரமாணம் சொல்லுக? (16)
19. ஆன்மாக்கள் எத்தனை வகையினர்? (17)
20. எதனால் அவர்கள் இத்தனை வகைப்பட்டார்கள்(17
21. மூவகை ஆன்மாக்களுக்கும் தனித்தனியுள்ள பாசங்கள் யாவை? (17)
22. அவர்கள் எங்கெங்கே வசிக்கிறார்கள்? (17)
23. அம்மூவகையாரிலும் தனித்தனி முதன்மை யானவர்கள் யாவர்? (18)
24. மூவகையாருக்குமுரிய சரீரங்கள் யாவை? (19)
25. விஞ்ஞானகலர் முதலியோருக்குக் கடவுள் எவ்வாறு அனுக்கிரகிப்பர்? (20)

முதல் பிரிவு முற்றும்.

## பிரிவு 2.

1. ஆன்மாக்களை ஆணவ மலத்தினின்றும் விடுவிக்கக் கருதிய முதல்வர் தமது அபின்னசத்தியாகிய பராசத்தியினின்றும் ஆயிரத்தில் ஒரு அம்சமாக அருள் சத்தியைத் தோற்றுவிப்பார். இதுவே ஆதிசத்தியாகும் ஆதிசத்தியின் ஆயிரத்தில் ஒரு பங்கு இச்சாசத்தி இச்சாசத்தியின் ஆயிரத்தில் ஒரு பங்கு ஞானசத்தி ஞானசத்தியின் ஆயிரத்தில் ஒருபங்கு கிரியாசத்தி.

*சதாசிவரூப அகவல்:—*

அன்ன சிவமா யிரமா யதிலோன்
றுன்னிய பரையதி லாயிரத் தொருகூ
றாதியா யதிலோ ராயிரங் கூற்றொரு
பேத மிச்சை யதிலா யிரம்பிறி
விங்குள ஞானம தீரைஞ் ஞூற்றொரு
பங்கு தொழிலிவை பஞ்ச சத்திகளே.

2. முதல்வன் தனதபின்ன சத்தியாகிய பராசத்தியை அதிட்டித்தபோது பரசிவன் என்றும், ஆதிசத்தியாகிய திரோதான சத்தியை அதிட்டித்தபோது திரோபவன் என்றும், இச்சா சத்தியை அதிட்டித்த போது இச்சிதா என்றும், ஞானசத்தியை அதிட்டித்த போது ஞாதா என்றும், கிரியாசத்தியை அதிட்டித்த போது கர்த்தா என்றும் பெயர் பெறுவர்.

3, முதல்வனின் அருட்சக்தி சுத்தமாயையில் பதிந்தபோது, அதிலிருந்து பஞ்சகலைகளும், நாத தத்துவமும், பிரணவசொரூபமான ஒரு நாதமுந் தோன்றும். இவ்விடத்தில் 'தோன்றும்' என்பது பிரகாசப்படும் எனப் பொருள்படும்,

4. பஞ்ச கலைகளாவன: நிவிர்த்திகலை பிரதிட்டா கலை, வித்தியாகலை, சாந்திகலை, சாந்தியாதீதகலை என்பனவாம், இவை மாயையின் உட்பிரிவுகளேயாகும் எப்படியெனில், நிவிர்த்திகலை பிரதிட்டாகலை இரண்டும் கொண்டது அசுத்தமாயை, வித்தியாகலை ஒன்றே உடையது சுத்தாசுத்தமாயை, சாந்திகலை சாந்தியாதீத கலை இரண்டுங்கொண்டது சுத்தமாயை ஆதலின் என்க.

5. தத்துவங்கள் சாதாரணம், அசாதாரணம் என இருவகைப்படும், சாதாரண தத்துவங்கள் அண்டத்தைப்பற்றி நிற்பன. அவை கலைகளின் உட்பிரிவுகளைக் குறிக்கும்.

6. அசாதாரண தத்துவங்கள் ஆன்மாக்கள்தோறும் பிண்டத்தைப்பற்றிச் சூக்குமமாய் நிற்பன. இப்போது கூறப்படுவன சாதாரண தத்துவங்களேயாகும்

7. தத்துவம் என்பது கலைகளின் உட்பிரிவுகளாகும். நாததத்துவத்தினின்றும் விந்துதத்துவம் தோன்

றும், விந்துவிலிருந்து சாதாக்கியம் தோன்றும், சாதாக்கியத்திலிருந்து ஈச்சுரம் தோன்றும், ஈச்சுரத்திலிருந்து சுத்தவித்தை தோன்றும் இவை ஐந்தும் சிவதத்துவங்கள் எனப்படும். இவைகள் சுத்தமாயா காரியங்கள்

சிவப்பிரகாசம் பொது:—

உன்னலரும் பரசிவன்ற னருளாலே நாத
  முதித்தது மிதநுங் குடிலைதனில் விந்துவரு நாதந்
தன்னிலதி லொளிவளருஞ் சதாசிவ ராமவரிற்
  றயங்கவரு மீசர்வித்தை தனையளிப்ப ரதனுள்.
மன்னுவரிவ் வகையைவர் வாய்மையிறன் முன்னே
  வந்திடு மென்றுரை செய்த விந்துவழா வகையே
முன்னுதவு சூக்குமாதி யொருநான்கு மென்று
  மொழிந்திடுவ ரருங்கலைகண் முதிர்ந்து ளோரே.

8. இவற்றுள் சாதாக்கிய தத்துவத்தில் அணுசதாசிவரும், ஈச்சுர தத்துவத்தில் அஷ்டவித்தியேசுரரும், சுத்தவித்தியா தத்துவத்தில் சப்தகோடி மஹாமந்திரரும் வசிக்கிறார்கள்.

9. இனி, அஷ்டவித்தியேசுரரில் முதல்வரான அனந்தரால் அசுத்தமாயை என்று வழங்கப்படும் சுத்தாசுத்தமாயையிலிருந்து மாயை என்னும் தத்துவம் தோன்றும். மாயா தத்துவத்திலிருந்து காலம், நியதி, கலை, வித்தை, அராகம் என்னும் ஐந்து தத்துவங்கள் தோன்

றும். இவை ஐந்தின சமூகமே புருடதத்துவம் எனப் படும். இவ்வாறு கூறப்பட்ட ஏழும் வித்தியாதத்துவங் கள் எனப்படும், இவை மிச்ரமாயா காரியங்கள். இவற் றுள் மாயாதத்துவத்தில் ஸ்ரீகண்டர், வீரர், மண்டலர், ககனேசர் முதலியோர் வசிக்கிறார்கள்.

10, இனி, மாயா தத்துவத்தில் வசிக்கும் ஸ்ரீ கண்டருத்திரராலே மூலப்பிரகிருதி என்னும் அசுத்த மாயையிலே குணதத்துவமாகிய சித்தம் தோன்றும். 'சித்தம் கலையிலிருந்து தோன்றும்' என்று சாத்திரங் கள் கூறியதின் தாற்பரியம் என்னெனின், கலை என்ற பதத்திற்கு அம்சம், பகுதி எனப்பொருள் இருப்பதால் அசுத்தமாயையின் அம்சமான அல்லது பகுதியான மூலப்பிரகிருதி மாயையிலிருந்து சித்தம் தோன்றும் என்பதே தாற்பரியம் என்க. சித்தத்திலிருந்து புத்தி யும், புத்தியிலிருந்து அகங்காரமும் தோன்றும்,

இவ்வகங்காரம் தைசத வகங்காரம் வைகாரி அகங் காரம், பூதாதி அகங்காரம் எனமூன்வகைப்படும் தைசத அகங்காரத்தில் மனமும் ஞானேந்திரியங்கள் ஐந்தும் தோன்றும். வைகாரி அகங்காரத்தில்கன்மேந்திரியங்கள் ஐந்தும் தோன்றும். பூதாதி அகங்காரத்தில் தன்மாத் திரைகள் ஐந்தும் தோன்றும். தன்மாத்திரைகளினின் றும் ஆகாயம், வாயு, தேயு, அப்பு, பிருதிவி என்னும் பஞ்சு பூதங்கள் தோன்றும்.

வே. 1/18



இவை இருபத்தி நான்கும் ஆன்மதத்துவங்கள் எனப்படும். இவ்வாறு ந[illegible] முதல் பிருதிவியீறாகிய முப்பத்தாறு சாதாரண தத்துவங்களும் ஒன்றன்பின் ஒன்றாகத் தோன்றும்.

இவைகள் அண்டத்தைப்பற்றி நிற்பன

**தத்துவங்களின் உயரப்பிரமாணம்**

11. பிருதிவி தத்துவம் நூறுகோடி யோசனை உயரமுள்ளது அதனினும் பத்து மடங்கு அதிக உயரம் உள்ளது. அப்புதத்துவம், அதனினும் பத்து மடங்கு வாயுத்தத்துவமும், அதனினும் பத்து மடங்கு (தன்மாத்திரைக் கொத்து, கன்மேந்திரியக் கொத்து, ஞானேந்திரியக் கொத்து, மனம் என்பவைகளைத் தன்னுள் அடக்கிய) அகங்காரதத்துவமும், அதனினும் பதின் மடங்கு புத்தி தத்துவமும், அதனினும் பதின் மடங்கு சித்த தத்துவமும் அதிக உயரம் உள்ளன.

சித்ததத்துவத்தினும் நூறு மடங்கு அராகதத்துவமும், அதனினும் நூறு மடங்கு வித்தை என்னும் தத்துவமும், அதனினும் நூறு மடங்கு கலை என்னும் தத்துவமும், அதனினும் நூறு மடங்கு நியதி தத்துவமும் அதனினும் நூறு மடங்கு காலதத்துவமும் அதனினும் நூறு மடங்கு மாயாதத்துவமும் அதிக உயரம் உடையன.

மாயா தத்துவத்திலும் ஆயிர மடங்கு சுத்த வித்தியா தத்துவமும், அதனினும் ஆயிர மடங்கு ஈச்சுர தத்துவமும், அதனினும் ஆயிர மடங்கு சாதாக்கிய தத்துவமும் அதிக உயரம் உள்ளன.

சாதாக்கிய தத்துவத்திலும் இலக்ஷ மடங்கு — தத்துவமும், அதனினும் இலக்ஷ மடங்கு நாததத்துவமும் அதிக உயரம் உடையன.

கருதிய மண் சதகோடி நீர்தீகால் ககனம கங்காரம் புத்தி
பிரகிருதிவரை பப்பத்திச்சை வித்தை கலை நியதி பிறங்கு
காலம்
தருமாயைவரை நூறு நூறு வுருத்திரனீசன் சாதாக்கியம்மா
யிரமாயிர முமைலட்சயோசனை மீதோன்றற்கோன்றே
ழுந்தானே

12. இவ்வாறு கூறப்பட்ட 36 சாதாரணதத்துவங்களும் 224 உட்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளே புவனங்கள். அவற்றின் விவரங்களைச் சித்தாந்தப் படத்திலும் சித்தாந்தப்பட விளக்கப் புத்தகத்திலும் விளக்கிக் காட்டி இருக்கிறோம் அவற்றிற் கண்டு கொள்க.

13. இங்ஙனம் கூறிப்போந்த கலைகள், தத்துவங்கள், புவனங்கள், மூன்றும் திரவிய பிரபஞ்சம் அல்லது பொருள் பிரபஞ்ச மெனப்படும்.

## பரீட்சை வினாக்கள்

26. பஞ்ச சத்திகளின் தோற்றம் எப்படி ?(1)
27. அவர்களைத் தனித்தனி கடவுள் அதிட்டித்தபோது அவர் அடையும் பெயர்கள் என்ன ? (2)
28. நாத தத்துவம் எப்போது தோன்றும் ? (3)
29. இங்குத் 'தோன்றும்' என்பதற்குப் பொருள் என்ன ? (3)
30. பஞ்ச கலைகள் எவை ? (4)
31. அவைமாயையின் உட்பிரிவுகள் ஆவது எப்படி ? (4)
32. தத்துவங்கள் எத்தனைவகைப்படும் ? (5)
33. அசாதாரண தத்துவங்கள் எத்தன்மையன ? (6)
34. தத்துவம் என்பது என்ன ? (7)
35. சிவதத்துவங்கள் தோன்றும் முறையினைக் கூறுக ? (7)
36. அவை எதன் காரியங்கள் ? (7)
37. சாதாக்கியம், ஈச்சுரம், சுத்த வித்தை, என்று தத்துவங்கள் ஒவ்வொன்றிலும் வசிப்போர் யாவர் ? (8)
38. வித்தியா தத்துவங்கள் தோன்றும் முறையினைக் கூறுக ? (9)

39. இவை எதன் காரியங்கள்? (9)
40. மாயா தத்துவத்தில் வசிப்போர்யாவர்? (9)
41. ஆன்ம தத்துவம் தோன்றும் முறைமை யினைக் கூறுக? (10)
42. கலையிலிருந்து சித்தம் தோன்றும் என்பதன் தாற்பரியம் என்ன? (10) (11)
43. தத்துவங்களின் உயரப்பிரமாணம் கூறுக?
44. தத்துவங்களின் உட்பிரிவுகள் எத்தனை?(12)
45. அவைகளுக்குப் பெயர் என்ன? (12)
46 பொருட் பிரபஞ்சமாவது யாது? (13)

## பிரிவு-3.

1. தாங்குஞ் சத்தியையுடைய சுத்தமாயை என்னும் குடிலையில் பாயுஞ்சத்தியாகிய அருள்சத்தி பதிந்தபோது உண்டாகியபிரணவாகாரமான நாதத்தினின்று விந்து தோன்றும். நாதமாவது தொனி. விந்து என்பது அத்தொனியால் அண்டவெளியில் ஏற்பட்ட வட்ட வடிவமான அலை.

2. அசாதாரண தத்துவங்கள் ஒன்றில் இருந்து ஒன்று தோன்றிய தென்பதில் தோன்றும் என்ற பதத்திற்குக் காரியப்படும் என்பது பொருள். ஆகையால்

அசாதாரண நாதசத்துவத்தினின்று விந்து தத்துவம் தோன்றிற்று என்றால் அந்நாத தத்துவத்தின் காரியமே விந்து தத்துவம் எனப்பொருள் கொள்க. இவ்வாறே மற்றவைக்குமாம்.

3. இந்த விந்துவிலிருந்து ஐம்பத்தோர் அக்கரங்கள், எண்பத்தோர் பதங்கள், பதினொரு மந்திரங்கள், வேதாகமாதி சாஸ்திரங்கள் எல்லாம் தோன்றும். எழுத்து, பதம், மந்திரங்கள் மூன்றும் சொற் பிரபஞ்சம் எனப்படும்.

4. இந்த விந்து தத்துவத்தினின்று சாதாக்கிய தத்துவமும், சாதாக்கிய தத்துவத்தினின்று ஈச்சுர தத்துவமும், ஈச்சுர தத்துவத்தினின்று சுத்தவித்தை யென்னும் தத்துவமும் தோன்றும்.

5. நாததத்துவம் ஞானமாயிருக்கும். விந்துதத்துவம் கிரியையாயிருக்கும். சாதாக்கியதத்துவம் ஞானமும் கிரியையும் சமமாயிருக்கும். ஈச்சுரதத்துவம் கிரியை மிகுந்து ஞானம் குறைந்திருக்கும். சுத்தவித்தியாதத்துவம் ஞானம் மிகுந்து கிரியை குறைந்திருக்கும்.

இதற்குப்பிரமாணம்:—சித்தியார்-சுப-சூ-65.

ஞானமே யான போது சிவன்றேழின் ஞான மோக்கி
னினமில் சதாசி வன்பே ரீச னுந் தொழில தேறி
ஞானமேற் கிரியை வித்தை யுருத்திர னிலைய போக
மான பேரதிகா ரத்தோ டதிகா ரணத்த னாமே.

என வரும்.

இவைகளின் பாகுபாட்டையும் நமது சித்தாந்தப் படத்தில் விளக்கிக்காட்டி யிருக்கிறோம்.

6. இவை ஐந்திலும் சிவசத்திகள் அதிட்டிக்கையால் சிவதத்துவம் என்றும், இவை ஐந்தும் மற்ற தத்துவங்களைச் செலுத்துகையால் பிரேரகாண்டம் என்றும் இவை பெயர் பெறும்.

7. இனி, அஷ்டவித்தியேசுரரில் முதல்வரான அனந்தரால் அசுத்தமாயையினின்றும் (காரிய) மாயை என்னும் தத்துவம் தோன்றும். மாயையில் இருந்து காலம், நியதி, கலை, வித்தை, அராகம் என்னும் தத்துவங்கள் ஐந்தும் தோன்றும். கலையிலிருந்து வித்தையும், வித்தையிலிருந்து அராகமும் தோன்றும் என்றும் ஒரு பட்சமுண்டு.

8. இவை ஐந்தின் சமூகமே புருடதத்துவம் எனப்படும்.

9. இங்ஙனம் கூறப்பட்ட மாயை முதல் புருடனீறாகிய தத்துவங்கள் வழும், ஆன்மாக்களுக்குரிய அறிவு இச்சை செயல்களை எழுப்புகையினால் வித்தியா தத்துவங்கள் என்றும், போகஏதுவாய் இருத்தலினால் போககாண்டம் என்றும் கூறப்படும்.

10 இனி, மாயா தத்துவ வாசியாகிய ஸ்ரீ கண்டருத்ர ராலே மூலப் பிரகிருதி மாயையிலே குணதத்துவமாகிய சித்த தத்துவம் தோன்றும். சித்த தத்துவத்திலிருந்து புத்தி தத்துவமும், அதிலிருந்து அகங்கார தத்துவமும் தோன்றும்.

11. சித்தம் என்பது சாத்துவிதம், இராசதம், தாமதம் எனும் முக்குணங்களும் தம்மில் சமமாய் விளங்கி நின்ற அவசரம்.

12 புத்தியில் சாத்துவிதம் மிகுந்து மற்றவை குறைந்து நிற்கும். அகங்காரத்தில் இராசதம் மிகுந்து மற்றவை குறைந்துநிற்கும்.

13. இந்த அகங்காரம் தைசத அகங்காரம், வைகாரி அகங்காரம், பூதாதி அகங்காரம் எனமூன்று வகைப்படும். சாத்துவித குணம்சமான தைசத வகங்

காரத்திலிருந்து மனமும் ஞானேந்திரியங்களும் தோன்றும். ஞானேந்திரியங்களாவன, சுரோத்திரம், துவக்கு, சட்சு, சிங்குவை, ஆக்கிராணம் என்பனவாம்.

14. இராசத குணாம்சமான வைகாரிஅகங்காரத்தினின்றும் கன்மேந்திரியங்களான வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபத்தம் எனும் ஐந்து தத்துவங்கள் தோன்றும்.

15 தாமத குணாம்சமான பூதாதியகங்காரத்தினின்றும் தன்மாத்திரைகளான சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் எனும் ஐந்து தத்துவங்கள் தோன்றும். இவைகளைப் பூதகுணமான சத்தாதிகள் என எண்ணி மயங்கற்க. இவை பூத காரணமான அதாவது பூதங்கள் தோன்றுவதற்கு இடமான சத்தாதிகள் என அறிக.

16. இந்தப் பூதகாரணமான சத்தாதிகளினின்றும் பஞ்சபூதங்கள் தோன்றும். எப்படியெனின் சத்தத்திலிருந்து ஆகாயமும், பரிசத்திலிருந்து வாயுவும், ரூபத்திலிருந்து தேயுவும், ரசத்திலிருந்து அப்புவும், கந்தத்திலிருந்து பிருதிவியும் தோன்றும். சிலர் ஆகாயத்திலிருந்து வாயுவும், வாயுவிலிருந்து தேயுவும், அதிலிருந்து அப்புவும், அதிலிருந்து பிருதிவியும் தோன்

றும் என்பர். சத்தகுணம் ஒன்றேயுடைய ஆகாயத்திலிருந்து சத்தம், பரிசம் எனும் இருகுணங்களையுடையவாயு தோன்றுதலால் அவர் கூறுவது பொருந்தாது என அறிக. ஆகாயாதி பூதங்கள் தத்தம் தன்மாத்திரைகளினின்றே தோன்றும்.

சிவப்பிரகாசம் பொது 14-15

அருத்திமிகுங் கலைகால நியதியுடன் வித்தை
யராகமிவை யனந்தரான் மாயைதனி லாகு
முருத்திரராற் கலையதனிற் பிரகிருதி குணங்க
ளுளவாத மகங்காரம் புத்தியின் லுதிக்குந்
தெரித்தவிது திரிவிதமாந் தைசதவை காரி
திகழ்தருபூ தாதியெனத் திருந்தியசாத் துவிதம்
விரித்ததனை மனம்புத்தி யிந்திரிய மென்று
விளம்பியசோத் திராதிமுதல் விளங்கியிடும்விரிந்தே;

மன்னியகன் மேந்திரிய மானவிரா சதஞ்சேர்
வாக்காதி வைகாரி மருவிவருஞ் சத்தந்
தன்னைமுத லாகியதா மதமிகுமாத் திரையின்
றருமதனில் வானநில மனல்புனல்மண் சத்த
முன்னதனில் வெளியாதி யொன்றேன் றத
முறையிலிவை யிருமையபன் முடிவா முன்னே
யுன்னுசதா சிவராதி யதிபதிக ளோடுக்க
முதித்தவடை வேனவுரைப்ப நுணர்ந்து ளோரே

17. இவ்வாறு கூறப்பட்ட சித்தமுதல் பிருதிவி யீறான இருபத்துநான்கு தத்துவங்களும் முக்குணம் சமேனபதைச் சித்தாந்தப்படத்தில் விளக்கமாய்க் காட்டியிருக்கிறோம். இவை, ஆன்மதத்துவங்கள் என்றும், ஆன்மாக்களுக்குப் போக்கியமாயிருப்பதால் போக்கிய காண்டம் என்றும் பெயர் பெறும் ஆகவே சிவதத்துவம் 5. வித்தியாதத்துவம் 7. ஆன்மத்துவம் 24. எனத் தத்துவங்கள் முப்பத்தாறும். இவைகள் அகக் கருவிக ளெனப்படும்.

18. இனி, இவ்வசாதாரண தத்துவங்களின் காரியங்களே புறக்கருவிகளாகும், அவையாவன:— மயிர், தோல, எலும்பு, நரம்பு, தசை எனும் ஐந்தும் பிருதிவியின் காரியம். நீர், உதிரம், மூளை, மச்சை, சுக்கிலம் எனும் ஐந்தும் அப்புவின்காரியம். ஆகாரம், நித்திரை, பயம், மைதுனம், சோம்பல் எனும் ஐந்தும் தேயுவின் காரியம். ஓடல், இருத்தல், நடத்தல், கிடத்தல், தத்தல் எனும் ஐந்தும் வாயுவின் காரியம் குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம் எனும் ஐந்தும் ஆகாயத்தின்காரியம். வாக்கின் தொழிலான வசனமும், பாதத்தின் தொழிலான கமனமும், பாணியின் தொழிலான தானமும், பாயுருவின் தொழிலான விசர்க்கமும், உபத்தத்தின் தொழிலான ஆனந்தமும் எனக் கன்மேந்தி

17586

ரியங்களின் காரியங்கள் ஐந்து. வாயுவின் காரியங்களா
பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன்
நாகன், கூர்மன், கிருதரன், தேவதத்தன், தனஞ்சய
எனும் வாயுக்கள்பத்து. இவைகளில் முன் ஐந்
வாயுக்களும் ஞானவாயுக்களென்றும், பின்னைந்
வாயுக்களும் கன்ம வாயுக்களென்றும் வழங்கப்படும்.

ஒப்பார் பிராண னபான னுதானனுடன்
தப்பா வியானன் சமானனே—இப்பாலு
நாகன் றனஞ்சயன் கூர்மன் கிருதரன்
தீதிலாத் தேவதத்த னே

பிருதிவியின் காரியமான இடை, பிங்கலை, சு
ழுனை, காந்தாரி, அத்தி, சிங்நுவை, அலம்புடை, பு
டன், சங்கினி, குகு எனும் நாடிகள் பத்து.

இடைபிங் கலைசுழுனை காந்தாரி யத்தி
புடைநின்ற சிங்நுவை சங்கினி பூடாவோ
டங்குது கன்னி யலம்பு வேனவுரைத்தார்
தங்கு தச நாடிக டாம்

விந்துவில் தோன்றுகிற சூக்குமை, பைசந்தி, ம
திமை, வைகரி எனும் வாக்குகள் நான்கு.

சூக்குமைநம் பைசந்தி மத்திமைசொல் வைகரியென்
றுக்குமிவற் றின்பே ரடைவறிக—சூக்குமைதான்
பந்தித்தான் மாவுணர்வைப் பைசந்தி மத்திமையா
மந்தத்திற் றலைவெமக் காம்.

மூலப் பிரகிருதியின் காரியமான சாத்துவிதம், இராசதம், தாமதம் எனும் குணங்கள் மூன்று. ஆகா பத்தின் காரியமான தாரவேடணை, புத்திர வேடணை, அர்த்த வேடணை எனும் ஏடணைகள் மூன்று. ஆகட் புறக் கருவிகள். 60

தத்துவப் பிரகாசம். 39.

பூதங்க டனிற்றேன்றும் காரியமை யைந்தும்
புகலும்வாக் காதிகளிற் றேன்றுதொழி லைந்தும்
நீதிவா யுவிற்றேன்றும் வாயுப் பத்தும்
நிகழ்பூதந் தனிற்றேன்றும் புகழ்நாடி பத்தும்
கோதில்விந்துவிற்றேன்றும் வாக்கு நாலும்
குலவுழ லந்தோன்றும் குணங்கள் மூன்றும்
பேதவா காயத்தி லேடணைகண் மூன்றும்
பிறக்குமறு பதுமிவைகள் புறக்கருவி யெனுமே.

இவைகளே தாத்துவிகங்களெனப்படும்.

L29 உ. வே.

19. தத்துவங்கள் இயங்கும் முறைமை:—இச்ச
சத்தி ஈச்சுர தத்துவத்தை இயக்கும். ஞானசத்தி நா
தத்துவத்தையும் சுத்தவித்தியா தத்துவத்தையும் இய
கும். கிரியாசத்தி விந்துதத்துவத்தையும் சாதாக்கி
தத்துவத்தையும் இயக்கும்.

இச்சை நடத்தியிடு மீச்சுர தத்துவத்
மெய்ச்சத்தி சாதாக்கிய மேவியிடும்—நிச்சயமே
பென்ற கிரியை நடத்தியிடு மெய்ஞ்ஞான
மென்றசிவஞ் சுத்தவித்தை யாம்.

20. இனி, நாத தத்துவம் மாயாதத்துவத்தை
இயக்கும். விந்து தத்துவம் காலம், நியதி, கலை எனு
மூன்று தத்துவங்களை இயக்கும். சாதாக்கிய தத்துவ
புருடதத்துவத்தை இயக்கும். ஈச்சுர தத்துவம் அராக
தத்துவத்தை இயக்கும். சுத்தவித்தியா தத்துவம் வித்
தையென்னும் தத்துவத்தை இயக்கும்.

கால நியதி கலைசத்தி தானடத்து
மேலும் வித்தை வித்தை யராகம் மீசர்—சாலவே
மாயை சிவம் புருடன் சாதாக்கிய மேவி
நேய முடனடுத்து நின்று.

21. இனி, மாயாதத்துவம் சித்ததத்துவத்தை
நடத்தும். கலாதத்துவம் அகங்கார தத்துவத்தை நடத்

தும். வித்தியா தத்துவம் புத்திதத்துவத்தை நடத்தும். அராகதத்துவம் மனதத்துவத்தை நடத்தும். இவ்வாறன்றி முன் சொன்ன விந்து தத்துவத்தில் தோன்றிய பிரணவாங்கமான அகார உகார மகார விந்துக்கள் அந்தக் கரணங்களை நடத்தும் என்றுங் கூறுவர். எப்படியெனில்: அகாரம் அகங்கார தத்துவத்தையும், உகாரம் புத்திதத்துவத்தையும், மகாரம் மனதத்துவத்தையும், விந்து சித்த தத்துவத்தையும் நடத்தும் என்பதாம்.

### துகளறு போதம்—11.

மன்னு மகார மனஞ்செலுத்தும் புத்தியினை
யுன்னு முகார முபகரிக்கு—முன்னுத
மாங்காரந்தன்னை யகாரஞ் செலுத்திவிடு
நீங்காத சித்தம் விந்து நேர்.

22. தத்துவங்களின் தொழில்:—சிவதத்துவங்கள் ஐந்தும் மற்றதத்துவங்களை இயக்கும்

23. மாயா தத்துவம் மயக்கி விளக்கும். காலதத்துவம் இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என மூவகைப்பட்டு காலத்தை நியதிப் படுத்தும்.

நியதி தத்துவம் அவரவர் செய்ததை அவரவரே புசிக்கும்படிச் செய்யும்.

கலா தத்துவம் ஆன்மாக்களுக்கு ஆணவமலத்தைச் சிறிது நீக்கும்.

வித்தை எனும் தத்துவம் ஆன்மாவின் ஞானத்தைச் சிறிது விளக்கும்.

அராக தத்துவம் பெற்றதினின்றும் பெறாததற்கு ஆசையை எழுப்பும்.

புருடதத்துவம் விடயத்திலே அழுத்தும்.

24. சித்ததத்துவம் சிந்திக்கும். புத்திதத்துவம் நிச்சயிக்கும். அகங்காரதத்துவம் யான், எனது என்னும் மமதையை உண்டாக்கும். மனதத்துவம் பற்றும்.

25. சுரோத்திரதத்துவம் சத்தத்தை அறியும். துவக்குதத்துவம் பரிசத்தை அறியும். சட்சு தத்துவம் ரூபத்தை அறியும். சிங்குவை தத்துவம் உருசியை அறியும். ஆக்கிராணதத்துவம் வாசனையை அறியும்.

26. வாக்குதத்துவம் வசனிக்கும். பாததத்துவம் நடக்கும். பாணிதத்துவம் இடுதல் ஏற்றல் செய்யும். பாயுருதத்துவம் மல,சலம் கழிக்கும். உபத்த தத்துவம் ஆனந்தத்தைச்செய்யும்.

27. தன்மாத்திரா தத்துவங்கள் ஐந்தும் பஞ்ச பூதங்களைத் தோற்றுவிக்கும்.

28. ஆகாயதத்துவம் இடங்கொடுக்கும். வாயு தத்துவம் சலித்துத் திரட்டும் தேயுதத்துவம் சுட்டு ஒன்றுவிக்கும். அப்புதத்துவம் குளிர்ந்து பதஞ்செய்யும். பிருதிவிதத்துவம் கடினமாய்த் தரிக்கும்.

29. இனி, மாயாதத்துவம் காரண சரீர மாகும்.

காலம், நியதி, கலை, வித்தை, அராகம் என்னும் ஐந்து தத்துவங்களும் கஞ்சுகசரீர மாகும்.

குணதத்துவம் (சித்தம்) குணசரீர மாகும்

புத்தி, அகங்காரம், மனம் எனும் அந்தக் காரணங்கள் மூன்றும் தன்மாத்திரைகள் ஐந்தும் கூடிய எட்டினும் அமைந்தது புரியட்டக சரீர மாகும். இதுவே சூக்குமசரீரம் இது சகலருக்குரிய சூக்கும சரீரமாகும். பிரளயாகலருக்குரிய சூக்கும சரீரமாவது மாயை 1. கலாதி பஞ்சகம் 1. குணதத்துவமாகிய சித்தம் 1. புத்தி, அகங்காரம், மனஞ்சேர்ந்த அந்தக்கரணம் 1. ஞானேந்திரியக்கொத்து 1. கன்மேந்திரியக்கொத்து 1. தன்மாத்திராக்கொத்து 1. பஞ்ச பூதம் 1. ஆக இனம் எட்டுக்கு தத்துவங்கள் 30 கொண்டது. இதற்கும் புரியட்டகசரீரம் என்று பெயர் உண்டு.

 1758.

போற்றுகன்ம ஞானமுடன் சத்தாதி பூதாதி
சாற்று மனமூன்று தத்துவமூ—மேற்றதுண
மொன்றுடன் மான்கலாதி யைந்துமுப் பானிவையு
மென்றபுரி யட்டகமென் றெண்.

பஞ்சபூத காரியங்களால் அமைந்தது தூல சரீர மாகும்.

இவை ஐந்து சரீரங்களில் காரணசரீரம் கஞ்சுக சரீரம் குணசரீரம் மூன்றையுஞ் சேர்த்துக் காரண சரீர மென்றுங் கூறுவர். இவ்வாறு கூறப்பட்ட காரண சரீரம், சூக்கும சரீரம், தூல சரீரம் மூன்றும் ஆன் மாக்களுக்குப் பஞ்சகோசங்களாய் அமையும். எப்படி யெனின், காரண சரீரம் ஆனந்தமய கோசமும் விஞ் ஞானமய கோசமுமாகும். சூக்கும சரீரம் மனோமய கோசமாகும். தூல சரீரம் பிராணமய கோசமும் அன்னமய கோசமுமாகுமென வறிக.

பரீட்சை வினாக்கள்,

46 விந்து எப்படித் தோன்றும்? (1)
47. விந்துஎன்பது என்ன? (1)
48. அசாதாரண தத்துவங்கள் ஒன்றிலிருந்து ஒன்று தோன்றிய தென்பதற்குப்பொருள் என்ன? (2)

49. விந்துவில் இருந்து தோன்றியவை எவை? (3)
50. சொற்பிரஞ்சம் எது? (3)
51. சாதாக்கியம் முதல் சுத்தவித்தையீறான தத்து வங்கள் தோன்றும் முறையைக் கூறுக. (4)
52. மேற்கூறிய ஐந்து தத்துவங்களும் இவ்வாறு இருக்கின்றன என்று பிரமாணத்தோடு தெரிவிக்க. (5)

53. இவைகள் ஐந்திற்கும் வேறு பெயர்கள் இன்ன இன்ன என்று காரணத்தோடு கூறுக. (6)
54. மாயா தத்துவம் தோன்றும் விதம் என்ன? (7)
55. காலாதி அராகம் ஈறான தத்துவங்கள் எங்கிருந்து தோன்றுகின்றன? (7)
56. இவ்வாறன்றி வேறெவ்வாறு சிலர் கூறுகின்றனர். (7)
57. புருட தத்துவம் எது. (8)
58. இந்த ஏழு தத்துவங்களுக்கும் இன்ன இன்ன பெயர் என்று காரணத்தோடு கூறுக. (9)
59. சித்த தத்துவத் தோற்றம் கூறுக. (10)
புத்தியும் அகங்காரமும் எவ்விதம் தோன்றுகின்றன? (10)
60. சித்தமாவது எது ? (11)
61. புத்தி தத்துவமும் அகங்கார தத்துவமும் எப்படியிருக்கும். (12)

62. அகங்காரம் எத்தனை வகைப்படும் (13)
63. ஞானேந்திரியங்கள் எவை ? (13)
64. கன்மேந்திரியங்கள் எவ்வாறு தோன்றும் ?
65. அவை எவை ? (14)
66. தன்மாத்திரைகள் எப்படித் தோன்றுகின்றன ? (15)
67. அவை யாவை ? (15)
68. அவை பூதகுணமான சத்தாதிகளா ? (15)
69. பஞ்ச பூதங்கள் எப்படித் தோற்றுகின்றன ? (15)
70. சிலர் எவ்வாறு இத்தோற்றத்தைப்பற்றிக் கூறுகிறார்கள் ? (16)
71. ஏன் அவ்வாறு சொல்லல் ஆகாது (16)
72. பிருதிவி முதல் சித்தம் ஈறான தத்துவங்கள் எப்படிப் பட்டன ? (17)
73. தத்துவம் எத்தனை ? (17)
74. இவைகளுக்கு என்ன பெயர் ? (17)
75. புறக்கருவிகள் எவை ? (18)
76. அவற்றின் விரிவைக் கூறுக ? (18)
77. சிவதத்துவங்கள் எப்படி இயங்கும் ? (19)
78. வித்தியா தத்துவங்கள் எப்படி இயங்கும் ? (20
79 ஆன்ம தத்துவங்கள் எப்படி இயங்கும் ? (21)
80. சிவதத்துவங்களின் தொழில்கள் என்ன ? (22)
81. வித்தியா தத்துவங்களின் தொழில்கள் என்ன ? (23.)

82. அந்தக்கரணங்களின் செயல்கள் என்ன ? (24)
83. ஞானேந்திரியங்களின் வேலைகளைக் கூறுக ? (25)
84. கன்மேந்திரியங்களின் செய்கைகள் எவை ? (26)
85 தன்மாத்திரா தத்துவங்களின் தொழில்கள் என்ன ? (27)
86. பூதங்களின தொழில்களைக் கூறுக ? (28)
87. சரீரங்கள் எத்தனை வகைப்படும் ? அவை யாவை. (29)

## பிரிவு 4.

1. இவ்வாறு கூறப்பட்ட கருவிகளுடன் ஆன்மா கூடியும பிரிந்தும் வருதலால் உண்டாவதே அவத்தை.

2. அது கேவலம், சகலம், சுத்தம் என மூவகைப் படும். இவைகளே காரணாவத்தைகள்.

3. கேவலாவத்தையாவது ஆன்மா அறிகருவிகளுடன் கூடாமல் ஆணவ மலத்தில அழுந்தி மாயையதாரகமாகக் கிடக்கும் அவதரம்.

4. சகலாவத்தையாவது ஆன்மா அறிகருவிகளுடன் கூடிநிற்கும் அவதரம்.

5. சுத்தாவத்தையாவது ஆன்மா கருவிகளுடன் கூடாமல் அருள் தாரகமாய் நிற்கும் அவத்தை. சுத்தாவத்தைக்கு நின்மலாவத்தை எனவும் பெயர்.

6. இனி, கேவலாதி மூன்றவத்தைகளும் தனித்தனி முறையே சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என ஐவகைப்படும் இவைகள் காரியாவத்தைகள்.

7. சகல சாக்கிரமாவது ஞானேந்திரியங்கள் ஐந்து, கன்மேந்திரியங்கள் ஐந்து, சத்தாதி ஐந்து, வசனாதி ஐந்து, பிராணாதிவாயுக்கள் பத்து, மனமாதி அந்தக்கரணங்கள் நான்கு, புருடன் ஒன்று, ஆக முப்பத்தைந்து கருவிகளுடன் ஆன்மா கூடி லலாடத்தானத்தில் நிற்கும் நிலை.

8. அப்போது ஆன்மா சகல சாக்கிரத்தில் போகங்களை அனுபவித்த சலிப்பினால், தனக்கோர் ஓய்வுத் தானத்தை விரும்பிக் கீழாலவத்தை யுறுவதற்காகச் சகல சாக்கிரத்தானத்தினின்று சிறிது நழுவிய போது ஆணவ மேலீட்டால் கண்டும் காணாமல், கேட்டும் கேளாமல் மயங்கி நிற்கும்.

9. சகல சொப்பனமாவது ஞானேந்திரிய கள்

மேந்திரியங்கள் லலாடத்தானத்தில் நிற்க, மற்ற இருபத்தைந்து கருவிகளுடன் ஆன்மா கூடிக் கண்டத்தானத்தில் நிற்கும் நிலை.

10. அப்போது ஆன்மா சாக்கிராவத்தையிலே நின்று அநுபவிக்க போகங்களை நினைக்கவும், சூக்கும தேக போகங்களை அநுபவிக்கவும் செய்யும்.

11. கேவல சுழுத்தியாவது மற்ற கருவிகள் கண்டத்தானத்தில் நிற்க, சித்தம், பிராணன், புருடன் எனும் மூன்று தத்துவங்களுடன் ஆன்மா கூடி இதயத்தானத்தினின்று சுகமாய்த் தூங்கும் அவதரம்.

12. கேவல துரியமாவது சித்தம் ஒன்றும் இதயத்தானத்தில் நிற்க, பிராணன், புருடன் எனும் இரண்டு கருவிகளுடன் நாபித்தானத்தில் நின்று ஒன்றும் தெரியாமல் தூங்கும் அவதரம்.

13. கேவல துரியாதீதமாவது பிராணவாயு ஒன்றும் நாபியில் நிற்கப், புருடன் உடம்பாக ஆன்மா மூலாதாரத்தில் அடங்கி, ஓரறிவு மற்று நிற்பது.

14. இவை ஆன்மா சாக்கிரத்தானத்தில் நின்று மூலாதாரத்தை அடையுங்கால் படும் அவத்தைகளாகும்.

15. இவ்வாறே மூலாதாரத்தினின்றும் சாக்கிரத் தானத்தை அடையுங் காலத்தும் ஆன்மா மோகதவத்தைப் படும்.

16. சகல சாக்கிரமாவது சுத்த தத்துவங்கள் ஐந்தும் தொழிற்படும் அவதரம். எனவே அவையிற்றால் இயக்கப்படும் ஏனைய தத்துவங்களெல்லாம் இயங்கும் அவதரம் என அறிக. இதுவே ஆன்மா பஞ்சேந்திரிய வாயிலாய் சப்தாதி விடயங்களை அறிந்து அனுபவிக்கும் நிலை.

17. சகல சொப்பனமாவது, ஈசுரம், சாதாக்கியம், விந்து, நாதங்களாகிய நான்கு தத்துவங்களும் தொழிற்படும் அவதரம்.

18. சகல சுழுத்தியாவது சாதாக்கியம் விந்து நாதங்களாகிய மூன்று தத்துவங்களும் தொழிற்படும் அவதரம்.

19. சகல துரியமாவது விந்து நாதங்கள் இரண்டும் தொழிற்படும் அவதரம்.

20. சகல துரியாதீதமாவது நாததத்துவம் தொழிற்படும் அவதரம்.

சித்தியார்—4ம் சூத்—36

உந்துசாக் கிரத்தி னுந்த லாவினிற் சுழுனை மூன்று
வந்திடும் துரியந் தன்னி லிரண்டொன்று துரியா தீதந்
தந்திடுஞ் சாக்கி ராதி யவத்தைக டானந் தோறு முள்ளே
முந்திடுங் கரணந் தன்னிற் சேருமா றுணர்ந்து கொ

21. ஒருவன் ஒருபொருளை ஓரிடத்தில் வைத்து மறந்து அந்தப் பொருளைக்கருதும்போது பிராணவாயுவும் இயங்காமல் மூர்ச்சித்திருக்கும் நிலை சகலத்தில் துரியாதீதமாம்.

22. அந்தப் பிராணவாயு இயங்கும்படி பெருமூச்செறிந்து அதனைவிசாரித்து அறிவோம் என்றநிலை சகலத்தில்துரியம்.

23 இன்ன இடத்திலேயல்லவோ போனோம் என்றநினைவெழுந்த நிலை சகலத்தில் சுழுத்தி.

24. இனி, இன்ன இடத்திலேயல்லவோ அந்தப் பொருளைவைத்தோம் என்று விசாரப்பட்டு அறிந்தநிலை சகலத்தில் சொப்பனம்.

25. அந்தப்பொருளை வைத்த இடத்திலே சென்று அதைக்கண்ட நிலை சகலத்தில் சாக்கிரம்.

விரும்பு மரும்பொருளை வீழ்த்து மயங்க
விரிந்தவனிலன் பெருமை—வருந்தறிவு
தோன்று நிலையாம் வீழ்ந்தவிடம் தோன்றுதலென்
றன்றனைந்தாஞ் சாக்கிரத்தி னம்

இங்ஙனம் காரிய கேவலாவஸ்தைகள் ஐந்துங் கண்டு கொள்க.

26. இனி நின்மல சாக்கிராவஸ்தையாவது தத்துவம் ஐந்தில சுத்த வித்தை நீங்காமல் நீங்கிய அவதரம்.

27. நின்மல சொப்பனாவஸ்தையாவது சுத்தவித்தையும் ஈச்சுரமும் நீங்காமல் நீங்கிய அவதரம்.

28. நின்மல சுழுத்தியாவது சுத்தவித்தை ஈச்சுரம் சாதாக்கியம் என்னும் மூன்றும் நீங்காமல் நீங்கிய அவதரம்.

29. நின்மல துரியமாவது சுத்தவித்தை ஈச்சுரம் சாதாக்கியம் விந்து என்னும் நான்கும் நீங்காமல் நீங்கிய அவதரம்.

30. நின்மல துரியாதீதமாவது சுத்ததத்துவங்களாகிய சுத்தவித்தை ஈசுரம் சாதாக்கியம் விந்து நாதங்கள் ஐந்தும் நீங்காமல் நீங்கிய அவதரம். இவை

ஐந்து தத்துவங்களும் நீங்காமல் நீங்க என்பது கொண்டே இவை ஐந்தாலும் செலுத்தப்பட்ட கருவிகளும் நீங்காமல் நீங்க என்பதாயிற்று.

இங்ஙனம் நின்மலாவத்தை ஐந்தும் கண்டுகொள்க.

31. இவ்வாறன்றி பின்வருமாறும் கூறப்படும்.

நின்மலசாக்கிரமாவது குருவினாலே ஞானதீட்சை செய்யப்பெற்று பதி பசு பாசங்களின் உண்மையை அறிந்து சிந்தித்து தெளிந்து கருவிகள் நீங்க விசாரித்து நிற்பது.

நின்மல சொப்பனமாவது கருவிகள் நீங்கியும் நீங்காமலும் இடையே சற்றுப் பதைப்புண்டாவது.

நின்மலசுழுத்தியாவது தத்துவங்கள் நீங்கி மேலான கேவலம் தானாய் நிற்பது.

நின்மலதுரியமாவது அக்கேவலமும் நீங்கி அருளினாலே தன்னையுங் கண்டு அருளையுங் கண்டு அது வசத்தாய் நிற்பது.

நின்மலதுரியாதீதமாவது பரசிவத்தைத் தரிசித்து பரமானந்தத்தில் அழுந்துவது.

32. நின்மலாவத்தையாகிய சுத்தாவத்தையிற் செய்யப்படும் புண்ணியங்கள் பத்து உண்டு. அவையாவன:—தத்துவ ரூபம், தத்துவதரிசனம், தத்துவசுத்தி, ஆன்மரூபம், ஆன்மதரிசனம், ஆன்மசுத்தி, சிவரூபம், சிவதரிசனம், சிவயோகம், சிவபோகம் என்பனவாம்.

33. தத்துவரூபமாவது பிருதிவி முதல் நாதம் முடிவான முப்பத்தாறு தத்துவங்களுடைய தொழிலை அறிதல்.

தத்துவ தரிசனமாவது அவையெல்லாம் அறிவில்லாத சடமென்று அறிதல்.

தத்துவசுத்தியாவது சிவஞானத்தினாலே அவைகளைத் தனக்கு அன்னியமென்று அறிந்து நீங்கல்.

ஆன்மரூபமாவது ஆன்மா ஞானமென்னும் அறிவே வடிவென அறிதல்.

ஆன்மதரிசனமாவது தத்துவங்களை யறிந்து நீங்கி அவற்றினின்று நீங்கிய அறிவு நான் என அறிதல்.

ஆன்ம சுத்தியாவது பந்தம் முத்தி யிரண்டிடத்தும்சிவனே உபகரிக்கிறாரென்று தன்னுடைய சுதந்தரமில்லாமையை அறிதல்.

சிவரூபமாவது தத்துவம் முப்பத்தாறிற்கும் அப்பாலாய் வாக்கு மனாதீத கோசரமாய் ஞானமே வடிவாயிருத்தல்.

சிவதரிசனமாவது ஆன்மாக்கள் தோறும் சிவன் செய்யும் பஞ்ச கிருத்தியங்களை ஆன்மா செய்யாதென்றறிந்து ஆன்மாவைத்தரிசிப்பித்து நிற்கிற ஞானம்.

சிவயோகமாவது ஆன்மா, சிவசத்தியையன்றித் தனக்கும் பிறருக்குஞ் சிறிதும் செயலில்லை யென்று தெளிந்து திருவருளில் அழுந்துதல்.

சிவபோகமாவது அவ்வாறு அழுந்தி நிற்புழி தோன்றிய ஞேயத்தைப் (சிவத்தைப்) பொருந்தி தானென வேறு தோன்றாமல் அதோடு இரண்டற நின்று சிவானந்தத்தைப் புசித்து கொண்டிருத்தல்.

## தத்துவ விளக்கச்சுருக்கம் முற்றிற்று.

ஓம்.

## பரீட்சை வினாக்கள்.

88. அவத்தை என்பது என்ன? (1)
89. அது எத்தனை வகைப்படும்? (2)
90. கேவலாவத்தை யாவது யாது? (3)
91. சகலாவத்தை யாவது யாது? (4)
92. சுத்தாவத்தை யாவது யாது? (5)
93. சுத்தாவத்தைக்கு வேறு பெயர் என்ன? (5)
94. இம்மூன்றும் தனித்தனி எத்தனைவகைப்படும்? (6)
95. கேவலசாக்கிரமாவது யாது? (7)
96. அப்போது ஆன்மா எவ்வாறிருக்கும்? (8)
97. கேவல சொப்பனமாவது யாது? (9)
98. அப்போது ஆன்மா என்ன செய்யும்? 10
99. கேவல சுழுத்தியாவது யாது? (11)
100. கேவல துரியமாவது யாது? (12)
101. கேவல துரியாதீதமாவது யாது? (13)
102. இவ்வவத்தைகள் எப்போது படும் அவத்தைகள்? (14)
103. மற்றும் எக்காலத்தில் ஐந்து அவத்தைப்படும் (15)
104. சகல சாக்கிரமாவது யாது? (16)
105. அது என்ன நிலை? (16)
106. சகல சொப்பனமாவது யாது? (17)
107. சகல சுழுத்தியாவது யாது? (18)

108. சகல துரியமாவது யாது? (19)
109. சகல துரியாதீதமாவது யாது? (20)
110. எந்தநிலை சகலத்தில் துரியாதீதம்? (21)
111. எந்தநிலை சகலத்தில் துரியம்? (22)
112 எந்தநிலை சகலத்தில் சுழுத்தி? 23)
113. எந்தநிலை சகலத்தில் சொப்பனம்? (24)
114. எந்தநிலை சகலத்தில் சாக்கிரம்? (25)
115 நின்மல சாக்கிரமாவது யாது? (26)
116. நின்மல சொப்பனமாவது யாது? (27)
117. நின்மல சுழுத்தியாவது யாது? (28)
118. நின்மல துரியமாவது யாது? (29)
119. நின்மல துரியாதீதமாவது யாது? (30)
120. இவ்வாறன்றி வேறாகவும் நின்மலாவத்தைகள் கூறப்படுமோ? (31)
121. நின்மலாவத்தையிற் செய்யப்படும் புண்ணியங்கள் எத்தனை? (31). (32)
122. தத்துவரூபம் முதலியவற்றின் றுபரியம் என்ன

பரீட்சை வினாக்கள்

முற்றும்

## சிவசத்தி பேதங்கள்

| சிவபேதம் | சத்திபேதம் |
| --- | --- |
| பரசிவம் | பராசத்தி |
| திரோபவன் | ஆதிசத்தி |
| இச்சிதா | இச்சா சத்தி |
| ஞாதா | ஞான சத்தி |
| கர்த்தா | கிரியா சத்தி |
| சிவம் | சத்தி |
| பரவாகீச்சுவரன் | பரவாகீச்சுவரி |
| (நாத மூர்த்தி) | (விந்து சத்தி) |
| அபரவாகீச்சுவரன் | அபரவாகீச்சுவரி |
| (விந்து மூர்த்தி) | (விந்து சத்தி) |
| சதாசிவன் | மனோன்மணி |
| மகேசன் | மகேசி (கௌரி) |
| உருத்திரன் | உருத்திரி (உமை) |
| விஷ்ணு | இலக்குமி |
| பிரமன் | சரஸ்வதி |

முதலியனவாம்.

விவரம் சித்தாந்தப் படத்திலும் அதன் விளக்கப் புத்தகத்திலும் காணப்படும்

# ஆன்மா.

| | | |
|---|---|---|
| விஞ்ஞானகலர் ஒரு மலர். | 1. பக்குவமலர் | அணுசதாசிவர், அஷ்ட வித்தியேசர் |
| | 2. பக்குவாபக்குவ மலர் | சப்தகோடி மகாமந்திரர் |
| | 3 அபக்குவமலர் | மாயா தத்துவத்தின் மேல் சுத்த வித்தியா தத்துவத்தின் கீழ்ப்பாகத்தில் வசிப்பவர்கள் |
| பிரளயாகலர் இருமலர். | 1. பக்குவமலகன்மர் | ஸ்ரீ கண்டர், வீரர், மண்டலர் எண்மர், ககணேசர் முதலியோர். |
| | 2. பக்குவாபக்குவ மல கன்மர் | சதருத்திரரும் காலாக்கினியுருத்திரர் முதலியோரும். இவர்கள் அசுத்தமாயா புவனபதிகள் |
| | 3. அபக்குவமல கன்மர் | மிச்ராத்துவாவாசிகள். |
| சகலர் மும்மலர். | 1. பக்குவமல கன்ம மாயை யுடையவர் | மோக்ஷ தாகம் உடையவர். |
| | 2. பக்குவாபக்குவ மலகன்ம்மாயை யுடையவ | மோக்ஷ விருப்பின்றிப் பதபோகங்களை விரும்பியவர்கள். |
| | 3. அபக்குவமலகன் மாயை யுடையவா | ... ட்ட குணங் ... ப் பிறந்து இறந்து உழலுவோர். |

## தத்துவம்.

| | | |
|---|---|---|
| 1. சுத்தமாயை<br>பரசிவம் | நாதம்<br>விந்து<br>சாதாக்கியம்<br>ஈச்சுரம்<br>சுத்தவித்தை | சிவதத்துவம்<br>பிரேரகாண்டம்<br>விஞ்ஞானகலர் |

| | | |
|---|---|---|
| 2. சுத்தாசுத்த<br>மாயை<br>அனந்தர் | மாயை<br>காலம்<br>நியதி<br>கலை<br>வித்தை<br>அராகம்<br>புருடன் | வித்தியா தத்துவம்<br>போக காண்டம்<br>பிரளயாகலர் |

3. அசுத்த மாயை ஸ்ரீகண்டர்

- சித்தம்
- புத்தி
- அகங்காரம்
- மனம்

} அந்தக்கரணம்

- சுரோத்திரம்
- துவக்கு
- சட்சு
- சிங்குவை
- ஆக்கிராணம்

} ஞானேந்திரியம்

- வாக்கு
- பாதம
- பாணி
- பாயுரு
- உபத்தம்

} கன்மேந்திரியம்

- சத்தம்
- பரிசம்
- ரூபம்
- ரசம்
- கந்தம்

} தன்மாத்திரை

- பிருதிவி
- அப்பு
- தேயு
- வாயு
- ஆகாயம்

} பஞ்சபூதம்

ஆன்ம தத்துவம். போக சயித்திருகாண்டம். சகலர்.

Selden & Co., Printers, Madras. ...